## மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை: திரு. ஏ.பி. மகாபாரதி, இ.ஆ.ப.,

நக.எண். 2994 / 2019 பேரூ. 2

நாள்: 06.07.2023

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – தஞ்சாவூர் மண்டலம் – மயிலாடுதுறை மாவட்டம் – பேரூராட்சிகளில் இருந்த நுழைவுப் பணியிடங்களில் (Entry Level Posts) பணியமர்த்தப்பட்ட பணியாளர்கள் – கல்வித் தகுதியின் அடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்டம் (தற்போது மயிலாடுதுறை மாவட்டம்) பேரூராட்சி அலகில் பணிபுரிந்து வந்த பணியாளருக்கு இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் ஈர்த்துக் கொள்ளப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டது – வரித்தண்டலர் பணியில் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண். 125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 27.05.1999.
2. அரசாணை (நிலை) எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(பேரூ.1) துறை, நாள். 31.05.2019.
3. சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்,ந.க.எண். 984 / 2013 /அ3, நாள். 28.11.2019 மற்றும் 23.08.2021.
4. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க எண். 2994 / 2019 பேரூ. 2 நாள் 02.12.2019.
5. செயல் அலுவலர், குத்தாலம் பேரூராட்சி கடிதம் ந.க.எண். 850/ 2019/அ1 நாள் 01.06.2023.
6. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை அவர்களின் கடிதம் ந.க.எண். 360/ பேரூ.1/2023–4, நாள். 08.03.2023.
7. சம்பந்தப்பட்டவரின் பணிப்பதிவேடு.
8. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

---

**ஆணை:**

அரசாணை (நிலை) எண். 125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை, நாள்.27.05.1999இன்படி, பேரூராட்சிகளில் 31.12.1996க்கு முன்பிருந்து தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்த பணியாளர்களை அவர்களின் தகுதிக்கேற்ப பேரூராட்சிகளில் அவ்வப்போது ஏற்படும் காலிப்பணியிடங்களில் (Entry Level post Only) தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்து, அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து, அவர்களது பணி வரன்முறை செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நேர்வில், தனியர் திருமதி. இரா. மாதவி என்பவர், தினக்கூலி அடிப்படையில் 01.03.1995 முதல் தமிழ் தட்டச்சு பதிவுரு எழுத்தராக குத்தாலம் பேரூராட்சியில் பணிபுரிந்து வந்த நிலையில், பேரூராட்சிகள் இயக்குநர் சென்னை அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 14407/4/1999/அ3 நாள் 02.06.2001 இன்படி, தனியரை, குத்தாலம் பேரூராட்சியில் காலியாக இருந்த பூங்கா காவலர் பணியிடத்தில், ரூ. 2000/– என்ற வீதத்தில் தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி பணியிடத்தில் 20.09.2001 முதல் பணியில் சேர்ந்துள்ளார் .

அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(பேரூ.1) துறை, நாள். 31.05.2019க்கிணங்க, பேரூராட்சிகளில் பணிபுரியும் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதியின் அடிப்படையில், இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் போன்ற அரசு நிலையாக்கப்பட்ட பணியிடங்களில் நிபந்தனைகளுக்குட்பட்டு, மேற்படி அரசாணையின் இணைப்பில் கண்டுள்ள பணியாளர்களை அவர்கள் **கீழ்நிலைப் பணியில் நியமனம்** செய்யப்பட்ட **நாளான 02.06.2001 முதல் கருத்தியலாக (Notionally)** நியமனம் செய்து ஈர்த்துக்கொள்ளலாம் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், சென்னை பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் செயல்முறைகள், ந.க.எண்.984/2013/அ3, நாள். 23.08.2021இல், அரசாணை (நிலை) எண். 125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 27.05.1999ன்படி பேரூராட்சிகளில் அரசு நிலையாக்கப்படாத பணியிடங்களான பதிவறை எழுத்தர், துப்புரவு பணி மேற்பார்வையாளர், அலுவலக உதவியாளர், இரவு காவலர் ஆகிய பணியிடங்களில் தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள கல்வி தகுதியின் அடிப்படையில் சிறப்பினம் நிகழ்வாக ஒருமுறை மட்டும் (One Time Consideration) இப்பணியாளர்கள் கீழ்நிலை பணியில் **நியமனம்** செய்யப்பட்ட நாளின் **அடிப்படையில் கருத்தியலாக (Notionally)** இளநிலை உதவியாளர்/வரித்தண்டலர் போன்ற அரசு நிலையாக்கப்பட்ட பணியிடங்களில் சில நிபந்தனைகளுக்குட்பட்டு நியமனம் செய்து ஈர்த்துக் கொள்ள அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, அப்போதைய நாகப்பட்டினம் மாவட்டம் (தற்போது மயிலாடுதுறை மாவட்டம்) பேரூராட்சி அலகில், அரசு நிலையாக்கப்படாத பூங்கா காவலர் பணியிடத்தில் பணிபுரிந்து வந்த கீழ்காணும் பணியாளரை, பார்வை 3–ல் காணும் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 984 / 2013 /அ3, நாள். 28.11.2019இக்கிணங்க, பார்வை 4–இல் காணும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி அரசு நிலையாக்கப்பட்ட பணியிடமான வரித்தண்டலர் பணியிடத்தில் முற்றிலும் தற்காலிகமாக நிபந்தனைகளுக்குட்பட்டு பின்வருமாறு பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரிந்த பேரூராட்சியின் பெயர் | வரித்தண்டலராக பணி நியமனம் செய்யப்பட்ட பேரூராட்சியின் பெயர் |
|---|---|---|
| 1. | திருமதி. இரா. மாதவி,<br>பூங்கா காவலர்,<br>குத்தாலம் பேரூராட்சி,<br>மயிலாடுதுறை மாவட்டம். | வரித்தண்டலர்,<br>குத்தாலம் பேரூராட்சி,<br>மயிலாடுதுறை மாவட்டம். |

இந்நிலையில், பார்வை 6இல் காணும் அரசு கடிதத்தில் மேற்படி நியமனம் செய்யப்பட்ட பணியாளரின் பணியினை, பேரூராட்சிகள் இயக்குநர் சென்னை அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 14407/4/1999/அ3 நாள் 02.06.2001 இன்படி, தனியர் தொகுப்பூதிய அடிப்படையில், நியமனம் செய்யப்பட்ட நாளான 02.06.2001–இல் கருத்தியலாக **(Notionally)** உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு உரிய நியமன அலுவலரால் (Appointing Authority) வரன்முறைப்படுத்துவதுடன், தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, பார்வை 4இல் காணும் விவரப்படி நியமனம் செய்யப்பட்ட பணியாளருக்கு, தனியரது பணியினை வரன்முறை செய்யக்கோரி, பார்வை 5 காணும் விவரப்படி சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலரால் பரிந்துரை செய்து கருத்துரு பெறப்பட்டுள்ளது. இக்கருத்துரு மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டினை பரிசீலிக்கப்பட்டதில், தனியர் வரித்தண்டலராக பணியில் சேர்ந்த நாள் முதல் நாளது தேதி வரை மேற்காணும் பணியாளர் மீது எவ்வித குற்றச்சாட்டுகளோ, தண்டனைகளோ ஊதிய உயர்வினை பாதிக்கும் வகையிலான விடுப்புகளோ ஏதும் இல்லாததால், இவரது பணிக்காலத்தில் எந்தவித பணிமுறிவும் ஏற்படவில்லை.

அதன்படி கீழ்காணும் பணியாளரின் பணியினை சென்னை, பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.984/2013/அ3, நாள்.23.08.2021–க்கும், பார்வை 2இல் கண்ட அரசாணைக்கும் எதிராக தொடரப்பட்ட W.P.No.17989/2019, W.P.No.23426/2019, W.P.No.21574/2019 மற்றும் W.P.No.27597/2019 ஆகிய வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் வரித்தண்டலர் பணியில் கலம் 4இல் கண்டுள்ளவாறு வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் பேரூராட்சியின் பெயர் | கருத்தியலாக (Notionally) பணி நியமனம் செய்யப்பட்ட நாள் | பணி வரன்முறை செய்யும் நாள். |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | திருமதி. இரா. மாதவி,<br>வரித்தண்டலர்,<br>குத்தாலம் பேரூராட்சி,<br>மயிலாடுதுறை மாவட்டம். | 02.06.2001 மு.ப. | 02.06.2001 மு.ப. |

இவ்வாறு தனியரது பணியினை வரன்முறை செய்யப்படும் நேர்வில், பணப்பயன்களை தனியர் அமைச்சுப்பணியில் வரித்தண்டலராக பணியேற்ற நாளான 02.12.2019 முதல் வழங்கிட அனுமதிக்கப்படுகிறது.

6/7/23

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மயிலாடுதுறை.

3/3

பெறுநர்
திருமதி. இரா. மாதவி,
வரித்தண்டலர்,
குத்தாலம் பேரூராட்சி,
மயிலாடுதுறை மாவட்டம். (செயல் அலுவலர் மூலமாக)

நகல்– பேரூராட்சிகளின் இயக்குநர், நகர் நிர்வாக அலுவலக வளாகம், சென்னை– 28.
நகல்–மாவட்ட ஆட்சியரின் முகாம் உதவியாளர், மயிலாடுதுறை மாவட்டம்.
நகல்– செயல் அலுவலர், குத்தாலம் பேரூராட்சி, மயிலாடுதுறை மாவட்டம்
நகல்– இருப்பு கோப்பு (பேரூ. 2).

06/07/2023

ந.க.எண் 850/2019/அ1
நாள்: 07.07.2023
/சார்வு செய்யப்பட்டது/
பெறுநர்:
திருமதி. இரா. மாதவி,
வரித்தண்டலர்,
குத்தாலம் பேரூராட்சி,
மயிலாடுதுறை

Executive Officer,
Selection Grade Town Panchayat,
Kuthalam-609801,
Mayiladuthurai District.

7/7/23